செ.வெ.எண் :64/ ஆகஸ்ட் /2020 நாள்: 27.08.2020

**திருச்சிராப்பள்ளி, சாக்சீடு-புனித மார்டின் சிறப்பு தத்துவள மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பெண் குழந்தை .மகாலெட்சுமி தொடர்பான விவரங்கள்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜீயபுரம் அருகிலுள்ள கடியாகுறிச்சி கிராமம் பேருந்து நிலையம் அருகே பச்சைநிற சட்டை கிளிப்பச்சை நிற ஜட்டி அணிந்த ஊதா நிற கட்டம் போட்ட சட்டையுடன் பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் 10.06.2020 அன்று காலை சுமார் 6.00 மணியளவில் மீட்கப்பட்ட, ஒரு மாதம் மதிக்கத்தக்க பெண் குழந்தைக்கு **மகாலெட்சுமி** என பெயரிடப்பட்டு, 08.08.2020 அன்று திருச்சிராப்பள்ளி குழந்தைகள் நலக் குழு முன் ஆஜர்படுத்தப்பட்டு, தற்காலிக வைப்பு ஆணை (TEMPORARY CUSTODY ORDER) பெறப்பட்டு, திருச்சிராப்பள்ளி , சாக்சீடு-புனித மார்டின் சிறப்பு தத்துவள மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

| **வ. எண்** | **குழந்தையின் பெயர்** | **குழந்தை மீட்கப்பட்ட தேதி** | **குழந்தை தங்க வைக்கப்பட்டுள்ள தத்து நிறுவனம்** | **மீட்கப்பட்ட இடம்** |
|---|---|---|---|---|
| 1. | **குழந்தை. மகாலெட்சுமி** | 10.06.2020 | சாக்சீடு-புனித மார்டின் சிறப்பு தத்துவள மையம், திருச்சிராப்பள்ளி | பேருந்து நிலையம் அருகில்,கடியாகுறிச்சி,ஜீயபுரம்,திருச்சிராப்பள்ளி |

இவ்வறிவிப்பினை காண்பவர்கள் இக்குழந்தையை பற்றிய விபரங்கள் மற்றும் பெற்றோர் அல்லது உறவினர்கள் பற்றிய தகவல்கள் தெரிந்தால் இருபத்தொரு நாட்களுக்குள் திருச்சிராப்பள்ளி, குழந்தைகள் நலக் குழு அல்லது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகிற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். மேலும் அவ்வாறு தகவல் தெரிவிக்காவிடில் இக்குழந்தைக்கு சட்டப்படியாக தத்து கொடுப்பதற்கு தடையில்லா சான்று (Legally Free for Adoption) வழங்கப்படும் என்பதை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

| தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: | |
|---|---|
| **தலைவர்/உறுப்பினர்கள்**<br>குழந்தைகள் நலக்குழு,<br>மெக்டொனால்டு ரோடு,<br>கலையரங்கம் திருமண மண்டபம் மாடியில்,<br>கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி.<br>தொ.எண்: 04312413819/9629929412. | **மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்,**<br>மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு,<br>N.E.1, மெக்டொனால்டு ரோடு,<br>கலையரங்கம் திருமண மண்டபம் மாடியில்,<br>கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி.<br>தொ.எண்: 0431-2413055/9047283819<br>மின்னஞ்சல்: dcpstrichy1@gmail.com |

வெளியீடு :

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.